மே – 10

# TNPSC துளிகள்

- கிராம் ஸ்வராஜ் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் அஜிவிகா மற்றும் கவுசல் விகாஸ் மேளாக்கள் நடத்தப்பட்டன. இதன் கீழ் வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் வெற்றி கொண்டாடப்பட்டது.
- பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் அஸ்ஸாம் மாநிலத்தின் கவுகாத்தியில் நாட்டில் மிக உயரமான (97.3 மீட்டர்) தேசியக் கொடி நிறுவப்பட உள்ளது. இந்த தேசியக்கொடி நிறுவுதல் திட்டத்தின் அணித் தலைவர் அங்குர் தாஸ் ஆவார். இப்பணி தொழில் மற்றும் வர்த்தகத் துறையால் பொலிவுறு நகரங்கள் திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது.
- IAAF உலக சாம்பியன்ஷிப் கால்பந்துப் போட்டியின் 17-வது பதிப்பு கத்தார் நாட்டின் தோகாவிலுள்ள செப்பணிடப்பட்ட பல்நோக்கு கலிஃபா சர்வதேச விளையாட்டு அரங்கத்தில் 2019 ஆம் ஆண்டின் செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 6 வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- 'ஸ்டார் கேல் மஹாகும்ப்' ('Star Khel Mahakumbh') எனும் விளையாட்டுத் தொடக்கமானது (Sports initiative) இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் தர்மசாலாவில் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரக் தாகூர் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரால் தொடங்கப்பட்டது. தடகள வீரர்கள் இத்திட்டத்தின் மூலம் கைப்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், கால்பந்து, கபடி, தடகளம் போன்ற விளையாட்டுகளில் போட்டியிடுவர்.
- தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பெர்க்கில் நடைபெற்ற இந்தியா – தென் ஆப்பிரிக்கா வணிக மாநாட்டில் வணிகம் மற்றும் தொழில்துறை (Commerce and Industry), மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சுரேஷ் பிரபு பங்கேற்றார்.

# தேசியச் செய்திகள்

## பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா

- மத்திய அமைச்சரவை நாடு முழுவதும் 20 அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்களை (All India Institute for Medical Sciences – AIIMS) அமைத்தல் மற்றும் 73 மருத்துவக் கல்லூரிகளை தரம் உயர்த்துதல் ஆகியவற்றிற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த முடிவுகள் பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு (2020 வரை) நீட்டிக்கப்பட்டுள்ளது.

### *பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா திட்டம்*

- 2003-ல் அறிவிக்கப்பட்ட பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா திட்டமானது, சுகாதாரத் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது தொடர்பான மத்திய அரசால் நிதியளிக்கப்படும் திட்டமாகும்.

- மலிவான மற்றும் நம்பகமான மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் கிடைப்பதில் இருக்கும் பிராந்திய சமநிலையற்ற தன்மையை (Regional Imbalances) சரிசெய்தல் மற்றும் நாட்டில் தரமான மருத்துவ கல்விக்கான வசதிகளை பெருக்குதல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## இந்திய நாகரிகத்தின் மீதான கண்காட்சி

- இந்திய நாகரிகத்தின் மீதான முதலாவது கண்காட்சி புது தில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- இக்கண்காட்சி இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம், புதுதில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகம் மற்றும் மும்பையிலுள்ள சத்ரபதி சிவாஜி மகராஜ் வஸ்து சங்கரஹலாயா ஆகியவற்றின் புதிய கூட்டிணைவை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இக்கண்காட்சி மத்திய கலாச்சார அமைச்சகத்தின் ஆதரவில் நடத்தப்படுகிறது.
- இந்தக் கண்காட்சி ஏற்பாடானது, இந்தியா சுதந்திரமடைந்த 70-வது ஆண்டு தினத்தை நினைவு கூறுவதின் ஒரு பகுதியாகவும், இந்தியா - ஐக்கியப் பேரரசு இடையேயான முக்கிய கலாச்சார பரிமாற்றத்திற்கான ஆண்டாகவும் திட்டமிடப்பட்டது.

## தரவு தேவைகள் மீதான தேசிய அளவிலான பயிற்சிப் பட்டறை

- தேசிய பேரிடர் அபாயக் குறைப்பு தரவுத்தளத்தின் (Disaster Risk Reduction Database) மீதான 2 நாள் பயிற்சிப் பட்டறை புதுதில்லியில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.
- இந்த பயிற்சிப் பட்டறையானது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் பின்வருவனவற்றுடன் கூட்டிணைந்து நடத்தப்பட்டது.
    - ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (UNICEF)
    - ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் (UNDP)
    - ஐக்கிய நாடுகளின் பேரிடர் குறைப்பிற்கான சர்வதேச யுக்தி (UNISDR)
- ஒரே மாதிரியான மற்றும் நம்பத்தகுந்த தேசிய அளவிலான பேரிடர் தரவுத்தளத்தை உருவாக்குவதே இந்த 2 நாள் பயிற்சிப் பட்டறையின் முக்கிய நோக்கமாகும்.
- இந்த தரவுத்தளமானது பேரிடர் அபாய குறைப்பிற்கான சென்டாய் கட்டமைப்பின் (Sendai Framework for Disaster Risk Reduction - SFDRR) இலக்குகளை அடைவதை நோக்கி மேற்கொள்ளப்படும் முயற்சிகளை கண்டறிய உதவி புரியும்.

# சர்வதேசச் செய்திகள்

## பராகுவே ஜனாதிபதி

- ஊழலை திறனான முறையில் நீக்குவதாக உறுதியளித்த ஆளும் கொலரடோ கட்சியின் முன்னாள் பழமைவாத செனட் அவை உறுப்பினரான அப்டோ பெனிடெஸ் பராகுவே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
- நடப்பில் செயல்பாட்டில் உள்ள அரசியலமைப்பு சட்டம் சர்வாதிகார ஆட்சிக்குப் பிறகு 1992 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது ஆகும். இதன்படி ஜனாதிபதியின்


பதவிக்காலம் 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



- உலகளவில் ஊழலை கண்காணித்து வரும் அமைப்பான டிரான்ஸ்பரென்ஸி இண்டர்நேஷனலின் ஊழல் உணர்வுக் குறியீட்டில் (Corruption Perception Index) கடந்த ஆண்டு பராகுவே 135-வது இடத்தைப் பிடித்துள்ளது. இக்குறியீடு 180 நாடுகளைக் கணக்கில் கொண்டு வெளியிடப்பட்டது.

## உலகின் முதல் மிதக்கும் அணுஉலை

- ரஷ்யா உலகின் முதல் மிதக்கும் அணு உலையின் அலகினை (World's only floating nuclear power unit) பால்டிக் கடல்பகுதியில் நிறுவியுள்ளது.




- உலகின் முதல் மிதக்கும் அணுஉலை, ரஷ்யாவின் வடகிழக்குப் பகுதியான சுகோட்காவிலுள்ள பேவெக் (Pevek ) துறைமுகத்திற்கு, செயின்ட் பீட்டஸ்பெர்க் கப்பல் கட்டும் தளத்திலிருந்து இழுத்துக் கொண்டு வரப்பட்டது. செயின்ட் பீட்டஸ்பெர்க் கப்பல் கட்டும் தளத்தில்தான் இந்த மிதக்கும் அணு உலை கட்டப்பட்டது.
- புகழ்பெற்ற ரஷ்ய விஞ்ஞானியான மைக்ஹெய்ல் வசில்யேவிச் லொமோனோசவ்வின் (Mikhail Vasilyevich Lomonosov) பெயரைக் கொண்டு இந்த மிதக்கும் அணுஉலைக்கு ‘அகாடெமிக் லொமோனோசவ்’ (Akademik Lomonosov) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

- அகாடெமிக் லொமோனோசவ் அணுஉலையானது, 70 ஆண்டு காலப் பழமைவாய்ந்த சவ்ன்ஸ்கயா வெப்ப அணுஉலை மற்றும் 1974-ஆம் ஆண்டு கட்டப்பட்ட பிலிபினோ அணுஉலை அலகு ஆகியவற்றிற்கு மாற்றாக துவங்கப்பட்டுள்ளது.
- இந்த மிதக்கும் அணுஉலை கடலில் கடுமையான சூழல்களைத் தாங்கி நிற்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ரஷ்யாவின் மிதக்கும் அணு வெப்ப ஆற்றல் நிலைய வகுப்பை (Russia's Floating Nuclear Thermal Power Plant - FNPP) சேர்ந்தது ஆகும்.
- சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த முடிவை வன்மையாகக் கண்டித்ததுடன் இதை 'அணு டைட்டானிக்' (டைட்டானிக் விபத்தைக் குறிப்பிடுகின்றனர்), பனியின் மீதான செர்னோபில் (செர்னோபில் விபத்தைக் குறிப்பிடுகின்றனர்) என அழைக்கின்றனர். அமெரிக்கா 1968 முதல் 1975 வரையில் ஒருமுறை பனாமாவில் மிதக்கும் அணுஉலையைப் பயன்படுத்தியுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## 27-வது GST கவுன்சில் கூட்டம்

- சரக்கு மற்றும் சேவை வரி (Good and Services Tax - GST) கவுன்சிலின் 27-வது கூட்டம் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியின் தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் காணொளிக் காட்சி மூலம் நடைபெற்றது.




- GST கவுன்சில்
  - GST-யின் தொழில்நுட்ப முதுகெலும்பான GST வலைப்பின்னலை (GST Network - GSTN) அரசுடைமை அமைப்பாக மாற்றுவதற்கான முன்மொழிவிற்கு ஒப்புதல் வழங்கியதோடு, புதிய மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட வருமான வரிவிவர அறிக்கை தாக்கல் செயல்முறையை (Return Filing Process) வெளியிட்டுள்ளது.
  - பல்வேறு மாநிலங்களிலிருந்து எதிர்ப்பு கிளம்பியதால் சர்க்கரை மீது மேல்வரி (Cess) விதிப்பதற்கான முடிவை தள்ளி வைத்துள்ளது.
- GST வலைப்பின்னல் தற்போது

- 24.5% மத்திய அரசால் உரிமை கொள்ளப்பட்டுள்ளது.
- 24.5% மாநிலங்களால் (ஒட்டு மொத்தமாக) உரிமை கொள்ளப்பட்டுள்ளது.
- மீதமுள்ள 51%, HDFC நிறுவனம், HDFC வங்கி, ICICI வங்கி, தேசிய பங்குச்சந்தை யுக்திசார் முதலீட்டு நிறுவனம் மற்றும் LIC வீட்டுவசதி நிதியியல் நிறுவனம் ஆகியவற்றால் உரிமை கொள்ளப்பட்டுள்ளது.

## வரும் பத்தாண்டுகளில் வேகமாக வளரும் பொருளாதார நாடுகள்

- ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் சமீபத்திய அறிக்கையின் படி வரும் பத்தாண்டுகளில் வேகமாக வளரும் பொருளாதார நாடுகள் பட்டியலில் உலகளவில் இந்தியா முதலிடத்தைப் பிடித்திருப்பதோடு, சீனா மற்றும் அமெரிக்க ஆகிய நாடுகளைவிட ஆண்டுக்கு 7.9% வளர்ச்சியைக் கொண்டு முன்னணியில் இருக்கிறது.
- 2026 ஆம் ஆண்டை நோக்கிய நிலையில், சீனா ஆண்டுக்கு 4.9% என்ற அளவிலும், அமெரிக்கா ஆண்டுக்கு 3% என்ற அளவிலும் பொருளாதார வளர்ச்சியை கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரான்ஸ் ஆண்டுக்கு 3.5% என்ற அளவில் வளர்ச்சியைக் கொண்டிருக்கும்.
- சிக்கலான புதிய பொருட்களை பொருளாதாரத்தில் கொண்டு வருவதற்கு தற்போதுள்ள அறிவை (Existing Knowledge) மீண்டும் புகுத்துதல் என்பது எந்த அளவிற்கு எளிமையானது என்பதை அளவிடும் சிக்கலான வாய்ப்புக் குறியீட்டில் (Complexity Opportunity Index - COI) இந்தியா சிறப்பான இடத்தைப் பிடித்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- 2026-ஐ நோக்கிய நிலையில் வேகமாக வளரும் பொருளாதார நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கும் உகாண்டா ஆண்டுக்கு 7.5% என்ற அளவில் பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- சகாராவிற்குக் கீழான ஆப்பிரிக்க நாடுகளில் பொருளாதார வளர்ச்சியானது பொருட்களை (Commodity) ஏற்றுமதி செய்யும் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து கிழக்கு ஆப்பிரிக்காவை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உகாண்டா (4-வது இடம்), தான்சானியா (4-வது இடம்) மற்றும் கென்யா (10-வது இடம்) ஆகிய நாடுகள் வரும் பத்தாண்டுகளில் உலகளவில் வேகமாக வளரும் நாடுகள் என கணிக்கப்பட்ட பொருளாதார நாடுகளில் முதல் பத்து இடங்களில் உள்ளன.
- வங்கதேசம், வெனிசுலா மற்றும் அங்கோலா போன்ற குறைந்த வருமானமுள்ள நாடுகள் அவைகளுடைய பொருளாதாரத்தைப் பெருக்கும் திறன்களை பரவலாக்கம் செய்யத் தவறிவிட்டதாகவும், வரும் பத்தாண்டுகளில் இவை குறைந்த வளர்ச்சி வாய்ப்புகளை சந்திக்க இருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# மாநிலச் செய்திகள்

## அஸ்தமங்கல் திட்டம்

- வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்களை அதிவேக அலைவரிசையுடன் கூடிய

(High-Speed Bandwidth) தொலைத் தொடர்பு வசதியினால் இணைக்கும் அஸ்தமங்கல் திட்டத்தை BSNL தொடங்கியுள்ளது.

- 1900 கைபேசி கோபுரங்கள் திமா ஹசாவோ மற்றும் கார்பி அங்லாங் ஆகிய மலைப் பிரதேச மாவட்டங்களில் அமைக்கப்படும்.
- அஸ்ஸாமில், தொலைதூரப் பகுதிகள் மற்றும் எல்லைப் பகுதிகள் ஆகியவற்றில் சிறந்த இணைப்பை (Better Connections) ஏற்படுத்தித் தருவதற்கு பொதுத்துறை தொலைத் தொடர்பு இயக்குநரான (Public sector telecom operator) BSNL முக்கியத்துவம் அளித்துள்ளது.
- அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளும் ஒளியிழை இணையதள இணைப்பு (optical fibre network) மூலம் இணைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# விளையாட்டுச் செய்திகள்

## IAAF டைமண்ட் லீக்

- இந்திய ஈட்டி எரிதல் வீரர் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் தங்கம் வென்றவரான நீரஜ் சோப்ரா தோகாவில் நடைபெற்ற IAAF டைமண்ட் லீக்கில் தேசிய அளவிலான தன்னுடைய சாதனையை முறியடித்துள்ளார்.



- சீசன் துவக்க லீக் வரிசையில் இவர் 87.43 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து நான்காவது சுற்றை முடித்துள்ளார்.
- சோப்ரா, சமீபத்தில் கோல்டு கோஸ்ட்டில் நடைபெற்ற 21-வது காமன்வெல்த் போட்டிகளில் 86.47 மீ தூரத்திற்கு ஈட்டியை எறிந்து தங்கப்பதக்கம் வென்றார்.
- IAAF டைமண்ட் லீக்கில், தாமஸ் ரோலெர் 95.78 மீட்டர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து முதலிடத்தைப் பிடித்துள்ளார். ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களான ஜோகன்னஸ் வெட்டர் (91.56 மீ) மற்றும் ஹாஃப்மேன் ஆன்ட்ரேஸ் (90.08 மீ) முறையே 2-வது மற்றும் 3-வது இடத்தை பிடித்துள்ளனர்.
- இந்த லீக்கின் அடுத்த போட்டி மே 12-ல் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெறும்.
- போலந்தில் நடைபெற்ற உலக U20 சேம்பியன்ஷிப் போட்டியில் 86.48 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து 2016 ஆம் ஆண்டின் சாதனைப் பட்டியலில் நீரஜ் இடம் பெற்றுள்ளார்.

## ஆஸர்பெய்ஜான் கிராண்ட் பிரி

- உலக சாம்பியனான லூவிஸ் ஹாமில்டன், 2018 ஆம் ஆண்டின் அசர்பைஜான் கிராண்ட் பிரியில் முதல் வெற்றியைப் பெற்றதோடு போட்டியின் தலைவர் பட்டத்தையும் (Leader of the Title Race) பெற்றுள்ளார்.




- 2018 ஆம் ஆண்டின் அசர்பைஜான் கிராண்ட் பிரி என்பது, அசர்பைஜானின் பக்குவிலுள்ள (Baku), பக்கு நகர சுற்றில் நடைபெற்ற பார்முலா ஒன் கார் பந்தயப் போட்டியாகும்.

- - - - - - - - - - - - - - - -